## இந்த புத்தகத்தில் கால வரிசை முறையில் தொடர்கின்ற சிந்தனை

## THE SEQUENTIAL PATH OF THOUGHT IN THIS BOOK

### அறிமுகம்

இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு பாடத்திலும் உள்ள வசனங்களும் கிறிஸ்தவர்களுடைய வேத பாடத்திலும், விசுவாச அளவிலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் தவிர்க்க முடியாத ஒரு முக்கியமான அம்சத்தை ஸ்தாபித்துக் கொள்ள உதவுவதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று வகையான காரியங்களிலும் நாம் எங்கே நிற்கிறோம் என்று தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். நாம் எங்கே நிற்கிறோம் என்று தெரிந்துகொண்ட பிறகு, தேவனுடைய ராஜ்யத்துக்குள் நமது ஆவிக்குரிய “விசுவாச கதவினை” விரிவாக திறக்கும்படி கால வரிசை முறைப்படியான நமது வேதபாடத்தில் முன்னோக்கிச் செல்ல முடியும். கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தில் குடிமக்களாக இருக்கிறார்கள். தேவனுடைய சித்தத்துக்கும், அவருடைய ஆளுகைக்கும் உட்பட்டு இவருடைய ராஜ்யம் செயல்படுகிறது. ஒன்றாம் பாடத்திலுள்ள வசனங்களின் மீது கிறிஸ்தவர்களுக்கு உண்டாகும் விசுவாசம், தேவனுடைய ராஜ்யத்தில் குடியுரிமை பெற்ற அவருடைய பிள்ளைகள் என்ற அடையாளத்தை நமக்குத் தருகிறது. *ரோமர் 8:16; பிலிப்பியர் 3:20.* நமது “உள்ளான மனிதர்களில்” நாம் பெற்றுள்ள அடையாளமும், குடியுரிமையும் தேவனுடைய ராஜ்யத்தின் வல்லமையை நமக்குள் நிலைநாட்டுகின்றன. *1 கொரிந்தியர் 4:20.* கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியின் பாதையில் “மகிமையின் மேல் மகிமையடைந்து” முன்னோக்கிச் செல்வதற்கு இந்த ஆசீர்வாதங்கள் உந்துசக்திகளாக இருக்கின்றன. *2 கொரிந்தியர் 3:18.* ஒரு கிறிஸ்தவன் ஒன்றாம் பாடத்திலுள்ள வசனங்கள் மீது விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளவில்லையென்றால், மீதமுள்ள பாடங்களில்





காணப்படும் வசனங்கள் மீது விசுவாசத்தை வளர்த்துக்கொள்வது கடினமானதாக இருக்கும்.

ஒவ்வொரு பாடத்தின் தலைப்பையும் பற்றி சுருக்கமாக தெரிவிப்பதே இந்தப் பாடத்தின் நோக்கம். நமது ஆவிக்குரிய வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய வகையில் வேதபாடம் படிக்கும் முறையை அமைத்துக் கொடுப்பதே “காலவரிசை முறையில் தொடர்கின்ற சிந்தனை”யை நாம் பின்பற்றுவதற்கான காரணமாகும். உலகெங்கிலுமுள்ள எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் கற்பிக்கப்படும் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கோட்பாடு அமைந்துள்ளது. மாணவர்கள் அடுத்த கல்விப் பயிற்சியில் சேருவதற்கு முன்பு குறிப்பிட்ட தலைப்புகளை புரிந்துகொள்ள வேண்டும். எல்லா மக்களும் கற்றுக்கொள்ளத்தக்க விதத்தை தேவன் ஒரே விதமாக அமைத்திருப்பதால், உலகப் பிரகாரமான கல்வியை கற்றுக் கொள்ளுவது போலவே வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்களும் ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய மனங்களில் தேவனுடைய வார்த்தையை புரிந்துகொண்டு, நாம் எதைக் கற்றுக்கொள்கிறோமோ அதன் மீது நம்முடைய இருதங்களில் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். நம்முடைய மனங்களிலும் இருதயங்களிலும் நாம் கற்றுக்கொள்ளுபவைகள் நம்முடைய குணத்திலும், செயல்பாடுகளிலும் மாற்றத்தை உண்டாக்குகின்றன. ஆகையினால், நாம் நீதியுள்ளவர்களாக நடந்துகொள்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் கற்றுக்கொள்பவைகளை நமக்கு உள்ளே கொண்டுபோவதே கற்றுக்கொள்வதில் நாம் செய்யவேண்டிய பயிற்சியாக இருக்கின்றது. இது நீதியின் பயிற்சியாகவும் இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, “இரக்கமுள்ள வர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” என்று இயேசுவிடம் கற்றுக்கொள்கிறோம். *மத்தேயு 5:7.* இரக்கமுள்ள

கிறிஸ்தவராக நாம் இருக்கவேண்டுமென்றால், மற்றவர்களிடம் இரக்கமாயிருக்க நாம் பழகிக்கொள்ளவேண்டும். பார்க்கவும் *யாக். 2:12,13.*

இயேசுவைப் போன்ற உணர்ச்சி உள்ளவர்களாக நாம் நடந்துகொண்டால் தான், பரலோகத்திற்கு போவதற்கு நமக்கு வழி உண்டாகும். சிலுவையினால் நமக்கு கிடைக்கும் கிருபை, பாவம் மரணம் என்பவற்றினின்று விடுதலை பெறுவதற்கான வல்லமையை நமக்குத் தருகிறது. இதனால் நம்முடைய பழைய மனுஷனைக் களைந்து போட்டு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறதின் மூலம் நம்மை நாமே மீண்டும் உருவாக்கிக்கொள்ள முடியும். *ரோமர் 8:1; எபேசியர் 4:22-24.* "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." *எபேசியர் 2:8,9.* பக்தியுள்ள மக்கள் தாங்கள் பரலோகத்திற்கு போகும்படி கிருபையால் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கவேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான். "நற்கிரியைகளை செய்கிறதற்கு" நாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டோம். ஆகவே இதற்கேற்ற விதமாக நம்மை நாம் உருவாக்கிக்கொள்ளும்படிக்கு விசுவாசத்தின் மூலமாக கிருபையினால் தேவனிடம் சமாதானம் பெற்றிருக்கிறோம். *எபேசியர் 2:10.* நாம் வேத வகுப்புகளிலும், தொழுகைகளிலும் கலந்துகொள்வதினால் மாத்திரமே தேவனுடைய பிள்ளைகளாக உருவாகிவிட முடியாது. இவைகள் முக்கியமானவைகள் தான். ஆனால், தேவன் அன்பாகவே இருக்கிறார். கிறிஸ்தவர்களும் அன்பானவர்களாக இருப்பதற்கு மற்றவர்களிடம் கட்டாயம் அன்புகூர வேண்டும். நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருகின்ற கிரியையினாலே விசுவாசம் பூரணப்படுவது போல "அன்பும் நமக்குள் பூரணப்படும்." *1 யோவான் 4:12.*

வேதத்தை கற்றுக்கொள்வதிலும், விசுவாசமுள்ளவர்களாய்





இருப்பதிலும், ஆவிக்குரிய வளர்ச்சியடைவதிலும் எந்தெந்த கிறிஸ்தவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் உதவி செய்வதே இந்தப் புத்தகத்தின் குறிக்கோள். விசுவாசத்தினால்.... விசுவாசத்திற்கென்று வளர்ச்சியடையும்படி தங்களுக்கு உதவக்கூடிய முக்கியமான தலைப்புகளை அவர்கள் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டதனால், இந்தப் பிரச்சனை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். *ரோமர் 1:17.* "மகிமையின் மேல் மகிமையடைந்து" ஆவிக்குரிய வளர்ச்சி அடைய முடியாதபடிக்கு இது அவர்களுக்கு தோல்வியை ஏற்படுத்தக் கூடும். கிறிஸ்தவர்களாகிய நாம் நற்கிரியைகளை செய்கிறதற்கு முடியாமல், நாம் எங்கே ஏன் தோற்றுப் போகிறோம் என்பதை அறியும்படி நம்மை நாமே சோதித்துப்பார்க்க முடியும். வீணரும், கனியற்றவர்களுமாயிருக்கிற கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய விசுவாசத்தில் பிரச்சனை இருக்கலாம்; அல்லது அவர்கள் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாய் இருப்பது அவர்களுக்கு பிரச்சனையாக இருக்கலாம். *2 பேதுரு 1:8,9.*

இந்தப் புத்தகத்திலுள்ள பாடங்களை படிப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படியாகவே நீளமான முன்னுரையும் அறிமுகப்பகுதியும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த முன்னுரையையும் அறிமுகப் பகுதியையும் குறித்த நோக்கத்தை வாக்கியங்களாக பின்வருமாறு காணலாம்.

**பாடம்**

**முன்னுரை:**

தமஸ்குவுக்கு செல்லும் வழியில் அப்போஸ்தலனாகிய பவுலிடம் இயேசுகிறிஸ்து ஒப்படைத்த ஊழியப் பொறுப்பு இது தான்:

*உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும்*

*விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும் படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். அப்போஸ்தலர் 26:17,18.*

இந்தப் புத்தகத்தில் இந்த வசனம் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருக் கின்றது. காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே இருந்ததும், இப்போது இருப்பதும், காலமே முடிந்துவிட்ட பிறகும் இருக்கப்போகின்றதுமான ஒரு பாடத்திற்கு முன்னுரையாக அமையக்கூடிய தகவல் பவுலிடம் ஒப்படைக்கப்பட்ட ஊழியப் பொறுப்பில் இடம்பெற்றிருந்தது. காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தேவனுடைய ராஜ்யம் இருந்தது, இப்போது இருக்கின்றது; இனி எப்போதும், காலம் முடிந்துவிட்ட பிறகும் இருக்கப் போகின்றது. தேவன் ஆவியாகவும், நித்தியமானவராகவும் இருக்கின்றார். அவருடைய ராஜ்யமும் ஆவிக்குரியதாகவும், நித்தியமானதாகவும் இருக்கின்றது. முன்பொரு காலத்தில் அல்லது மனுக்குலம் சிருஷ்டிக்கப்பட்ட போது, பிசாசுகள் வாசம்பண்ணுகிற ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொள்ளும்படிக்கு சாத்தானுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இப்பொழுது அவன் பூமியெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் 700 கோடி மக்களில் பெரும்பாலானவர்களை தன்னுடைய இருண்ட ராஜ்யத்திற்குள் சிறைப்பிடித்து வைத்திருக்கின்றான். பவுலிடம் ஊழிய பொறுப்பை ஒப்படைத்தபோது இயேசு குறிப்பிட்ட இரண்டு ராஜ்யங்களையும் பற்றி விசுவாசத்தின் மூலம் நாம் உணர்ந்துகொண்டால் தான் “என் சபையைக் கட்டுவேன்'' என்று அவர் சொன்னபோது என்ன திட்டத்தோடு அப்படி சொன்னாரென்பதை நம்மால் தெரிந்துகொள்ளமுடியும்.





*மத்தேயு 16:17-20.* அவர் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை *எபேசியர் 2:19-22* வரை உள்ள வசனங்கள் விவரிக்கின்றன. அவர் சாத்தானுயை ராஜ்யத்திலிருந்து வெளியே அழைத்து வந்திருக்கின்ற மீட்கப்பட்ட பாவிகளைக் கொண்டு தமது பிதாவுக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து திரும்ப வருகின்றபோது, சாத்தானையும் அவனுடைய ராஜ்யத்துக்குரியவர்களையும் அக்கினிக் கடலில் தள்ளுவதின் மூலம் அவர்களுக்கு முடிவு உண்டாக்குவார். “மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.” *வெளி. 20:14.* நம்முடைய வேதபாடங்கள் எல்லாவற்றிற்கும் பின்னணியில் நமது விசுவாசக் காட்சியில் தேவனுடைய ராஜ்யமும், சாத்தானுடைய ராஜ்யமும் செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்க்க வேண்டும். வேதாகமத்தில் தேவன் தெரிவிக்கின்ற வரலாற்றுக் கதையில் தேவன் நல்லவராக இருக்கின்றார். சாத்தான் அவருடைய ஏதிராளியாக இருக்கின்றான். இந்தக் கதை *ஆதியாகமம் 1:1*இல் ஆரம்பித்து *வெளி. 22:21*இல் முடிவடைகிறது. நம்முடைய வேதபாடத்தில் தேவனுடைய ராஜ்யத்தையும், சாத்தானுடைய ராஜ்யத்தையும் பின்னணியில் வைத்து படிக்காவிட்டால், வேதாகம சம்பவங்களை தொடர்ச்சியாக நாம் பின் தொடர முடியாது. வேதாகமத்தில் ஆரம்பம் முதல் முடிவு வரையில் இந்தக் கதைதான் இடம்பெற்றுள்ளது. அவர் நல்லவராக இருக்கின்றார். சாத்தான் அவருடைய எதிரியாக இருக்கின்றான்; இதன் காரணமாக, தேவன் தெரிவிக்கின்ற வரலாற்றுக் கதையை சுவிசேஷ புத்தகங்களில் நாம் வாசிக்கும்பொழுதெல்லாம், இந்த விஷயங்களை நம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்கள் சபையைக் குறித்து வேதத்தில் சொல்லப்படாத கோணத்தில் ஒரு தோற்றத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். நாம்

எங்கிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோமென்றும், எந்த இடத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறோமென்றும் அறியாமல் சபையைக் குறித்து சிந்தித்ததால் இப்படி ஒரு நிலை உருவாகியிருக்கிறது. அவர்கள் வழக்கமாக சபையை மூன்றாவது அம்சமாக உருவாக்குகிறார்கள். "வெறும் மனித ஞானத்தின் படி" கட்டப்பட்ட ஒரு நிறுவனமே இதன் விளைவாகும். *1 கொரிந்தியர் 3:1-10.* சபையென்பது மறுபடியும் பிறந்ததன் மூலமாக சாத்தானுடைய ராஜ்யத்தை விட்டு வெளியே கொண்டுவரப்பட்ட மக்கள் கூட்டத்தை குறிக்கின்றது. சபை என்ற வார்த்தைக்கு "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தமாகும். கிறிஸ்தவர்களாகிய நம்முடைய புதிய பிறப்பு "சுத்திகரிக்கப்பட்ட மக்களுக்கு" மத்தியில் தேவனுடைய ராஜ்யமாகிய இயேசுவின் ராஜ்யத்தில் நமக்கு இடத்தை கொடுத்திருக்கின்றது. *எபேசியர் 5:5; கொலோசெயர் 1:13,14.*

தேவன் இயேசுவுக்கு ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைக் கொடுத்தார். அவருடைய பிதாவின் அதிகார வரம்புக்கு உட்பட்டு, ராஜாவாகவும், ஆசாரியராகவும் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றும்படிக்கு அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பார்க்கவும் *எபி. 1:8; 2:10; 4:14.* "வெளியே அழைக்கப்பட்ட "இந்த மக்களுக்கு இயேசு தலைவராக இருக்கின்றார். தேவனுடைய குமாரனின் ஆளுகையின் கீழ் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களாய் இருக்கிறார்கள். *1 கொரி. 15:24; பிலிப்பியர் 3:20,21.* "மனுஷனுடைய ஞானத்தினால்" தேவனுடைய வார்த்தைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சபை என்ற வார்த்தையை வைத்து இந்த உலகம் ஏதோவொன்றை உருவாக்கி வைத்திருக்கின்றது. தேவனுடைய ராஜ்யத்தையும், சாத்தானுடைய ராஜ்யத்தையும் பற்றி புரிந்துகொள்ளாமல் மக்கள் வேதத்தை வாசிக்கும் பொழுது, இதுதான் எப்பொழுதும் நடக்கும். நாம் அடுத்த சிந்தனைகளுக்கு நம்முடைய மனங்களை கொண்டு செல்வதற்கு முன்பாக, முன்னுரையை மீண்டும் ஒரு முறை திருப்பிப் பார்ப்பது அவசியமாகலாம்.





**அறிமுகம் : பெட்டிக்குள் பிறந்தவர்கள்**

நாம் யாவரும் நாம் தேர்ந்தெடுக்காத ஒரு குடும்பத்தில் பிறந்திருக்கிறோம் என்பதையும், மிகவும் சந்தோஷப்பட முடியாத சூழ்நிலையில் வாழ்கிறோம் என்பதையும், ஏதோ ஒரு நாடு நம்முடைய தாய்நாடாக இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்கிறோம். நமது அறிமுக பகுதியில் இதுதான் ஒரு நபருடைய "வாழ்க்கைப் பெட்டி" என்றழைக்கப்படுகிறது. எப்படி நம்முடைய கலாச்சாரமானது நம்முடைய சுவையையும், உடைகளையும், மொழியையும், பலவற்றை தேர்ந்தெடுப்பதை பற்றிய நம்முடைய விருப்பங்களையும் வலிமையாக பாதிக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்கிறோம். மக்கள் தாங்கள் பிறந்துள்ள பக்தியுள்ள குடும்பத்தின் சூழ்நிலையை பொறுத்து கிறிஸ்தவர்களாகவோ, இந்துக்களாகவோ, முஸ்லீம்களாகவோ, பௌத்தர்களாகவோ, யூதர்களாகவோ அல்லது வேறு ஏதேனும் மதத்தைச் சார்ந்தவர்களாகவோ தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளுகிறார்கள். மக்கள் தாங்கள் வாழ்கிற குடும்பம் பக்தியுள்ளதாக அல்லது பக்தியற்றதாக இருக்கின்றதைப் பொறுத்தே அதற்கேற்ற வாழ்க்கைப் பெட்டியில் அகப்பட்டு வாழ்கிறார்கள்.

ஆகையினால், நாம் இவ்விதமாக கேட்டுக்கொள்கிறோம், "சபை என்றால் என்ன என்பதற்கான பதிலை நான் எங்கிருந்து பெற்றுக்கொண்டேன்?" தேவனுடைய வார்த்தையை படித்ததினால் நான் தெரிந்துகொண்டேனா அல்லது இந்த உலக கலாச்சாரம் எனக்கு அதை சொல்லிக் கொடுத்ததா? நம்மில் அநேகர் வேகமாக, "என்னுடைய வேதபாடத்திலிருந்து நான் அதை தெரிந்துகொண்டேன்" என்று தான் சொல்லுவோம். இந்தக் கருத்தை தயவுகூர்ந்து கவனியுங்கள்: "பரிசுத்த வேதாகமத்தை தினமும் வாசிக்கின்ற அநேகர், தாங்கள் ஏற்கனவே எதை நம்பினார்களோ, அதையே வசனங்கள் சொல்கின்றன என்று முடிவு

செய்கிறார்கள்.” அநேகர் தாங்கள் சேர்ந்துள்ள மதம் எந்த நம்பிக்கையை அடையாளப்படுத்துகிறதோ, அதையே தான் நம்புகிறார்கள். சபை என்று தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளுகிற ஒரு குழுவைப் பற்றி பொதுவாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள உண்மை என்னவென்றால், அவர்களுடைய நம்பிக்கைகளை ஒரு தனி நபரிடமிருந்தோ அல்லது ஒரு இயக்கத்திடமிருந்தோ பெற்றிருக்கிறார்கள் என்பது தான். இந்தப் “பெட்டியிலிருந்து” தான் கிறிஸ்தவர்கள் தங்கள் உள்ளான மனிதர்களை விடுவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கின்றது. ஏனெனில், “சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.” *2 கொரிந்தியர் 11:14.*

ஒரு நல்ல போதகன் அல்லது போதகம் செய்யக் கூடிய பெண் ஒரு வசனம் என்ன அர்த்தத்தை தருகிறது என்று நினைக்கிறானோ/ளோ, அந்த எண்ணத்தை கட்டுப்படுத்திக்கொண்டு, அந்த வசனம் என்ன அர்த்தத்தில் அதன் எழுத்தாளரால் எழுதப்பட்டது என்பதை முதலாவது புரிந்துகொள்ள முயற்சிப்பான்/ள். ஒரு வசனம் என்ன அர்த்தத்தில் எழுதப்பட்டது என்பதை நாம் புரிந்துகொள்ளும் வரையிலும், அதைப் புரிந்துகொள்கிற நிலையை அடைந்துவிட்டோம் என்று நாம் சொல்ல முடியாது. இந்தப் பாடங்களை வாசிக்கின்ற ஒவ்வொருவரும் வசனங்கள் என்ன அர்த்தம் தருகின்றன என்பதைப் பற்றி அவர்களே சொந்தமாக தீர்மானிக்க வேண்டி இருக்கும். இதன் ஆசிரியர் தன்னுடைய அனுமானத்தை தெரிவித்திருக்கின்றார்.

**பாடம் ஒன்று**

*தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். ரோமர் 8:29*





*உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். 1 கொரி. 2:7.*

இயேசு கிறிஸ்து சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து தம்முடைய ஆளுகையும், ஆசாரியத்துவமும் செயல்படுகின்ற தம்முடைய அதிகார வரம்புக்குள் வரும்படி தேவனுடைய ராஜ்யத்துக்குரிய பிரசங்கத்தின் மூலம் பாவிகளை அழைத்தார். இதன் மூலம் நாம் பாவங்களிலிருந்து விடுதலையாகி, தேவனுடைய பிள்ளைகளாக நாம் உருவாவதற்கு உதவக்கூடிய தெய்வீக ஐக்கியத்தையும் பெற்றுக்கொள்ளுகிறோம். இந்த நோக்கத்துக்காக தான் தேவன் மனுக்குலத்தை சிருஷ்டித்தார். இதன் காரணமாக, தேவனுடைய பிள்ளைகள் என்ற கிறிஸ்தவர்களின் அடையாளமே நம்முடைய தனிப்பட்ட விசுவாசத்தின் ஆரம்பமாகின்றது.

**பாடம் இரண்டு**

தேவன் மனிதர்களை தம்முடைய நோக்கத்திற்கு ஏற்ற வகையில் தான் வடிவமைத்திருக்கிறார். தம்முடைய நித்திய ராஜ்யத்தில் ஒரு மகிமையுள்ள பங்கை பெற்றுக்கொள்வதற்காகவே அவர் மனுக்குலத்தை சிருஷ்டித்தார். ஆகையினால், ஒவ்வொரு மனிதனுடைய ஆவிக்குள்ளே யும் மகிமையையும், கனத்தையும், சமூக அங்கீகாரத்தையும், பாதுகாப்பையும் உறுதியாக தேடக்கூடிய தேவையை அவர் சிருஷ்டித்திருக்கின்றார். மனம், இருதயம், மனச்சாட்சி என்றெல்லாம் செயல்படக் கூடிய திறமைகளோடு படைக்கப்பட்டிருக்கின்ற நமது “உள்ளான மனிதன்” தான் நம்முடைய ஆவி. மனிதன் இரண்டு பாகங்களாக படைக்கப்பட்டிருக்கிறான். நம்முடைய ஒவ்வொரு “உள்ளான மனிதனுக்கும்” கருவியாக இருப்பது தான் நம்முடைய சரீரம்; இதைக் கொண்டு நாம் “பேசுகிறோம்” செயல்படுகின்றோம். *யாக்கோபு 2:12;*

*ரோமர் 6:13.* நம்முடைய சரீரங்களுக்கும் இயல்பான தேவைகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய ஆவிகளின் ஜீவன் தான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. *மத்தேயு 6:25.*

எல்லா மனிதர்களுக்குள்ளும் தேவன் ஏற்படுத்தியிருக்கின்ற தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கான தேடல்தான், அவர்களை தீவிரமாக செயல்பட வைக்கும் சக்தியாக இருக்கின்றது. கிறிஸ்தவர் களுடைய ஒவ்வொரு இயல்பான தேவையையும் திருப்திப்படுத்துவதற்கான திட்டங்களை இயேசு தேவனுடைய ராஜ்யத்தில் ஏற்படுத்துகின்றார். அவருடைய திட்டத்தினால் நம்முடைய எல்லாத் தேவைகளையும் திருப்திப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். சாத்தான் பொய்யானவைகளை நமக்குத் தருகிறான். ஒரு மனிதனுடைய தேவையை திருப்திப்படுத்துவதற்கு அவன் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்கள், அந்த மனிதனுடைய மற்றத் தேவைகளுக்கான நம்பிக்கையை தகர்த்து விடும். இது ஒரு மனிதனுடைய வாழ்க்கை நொறுங்கிப் போகவும், அவனுடைய மனஅமைதி குலைந்து போகவும் செய்வதால், அந்த மனிதன் கவலையின் தாக்குதலுக்கு ஆளாகின்றான். இது, அந்த மனிதன் கனி கொடுக்கும்படி துடிப்புடன் செயல்படுவதற்கு வேண்டிய வல்லமையை அகற்றி அவனை பெலவீனப்படுத்திவிடுகிறது. *2 பேதுரு 1:8.* தேவன் நமக்குள் சிருஷ்டித்து இருக்கிறதான தேவைகளுக்கும், அவைகளை திருப்திப்படுத்துகின்ற அவருடைய இலக்குகளுக்கும் இடையில்தான், நாம் கனி கொடுப்பதற்கு வேண்டிய வல்லமை உற்பத்தியாகின்றது.

**பாடம் மூன்று**

பிள்ளைகளுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். அதனால்தான் தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் அந்த





உரிமையை கொடுத்தார். ஆதியாகமம் ஒன்று முதல் மூன்று அதிகாரங்களில் நாம் பார்க்கின்ற விவரமானது, நல்லவராயிருக்கிற தேவனையும், அவருடைய எதிரியையும், பரிசுத்த வேதாகமத்தில் அவர் தெரிவிக்கின்ற வரலாற்றுக் கதையின் முக்கிய நிகழ்ச்சியையும் நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. இயேசு திரும்ப வருகின்ற போது, இந்த முக்கிய நிகழ்ச்சி முடிவுக்கு வரும். ஏற்கனவே மாம்சத்தில் மரித்துப்போனவர்களை பொறுத்த அளவில், இந்த முக்கிய நிகழ்ச்சி முடிவடைந்துவிட்டது. அவர்கள் யாவரும் தேவனிடம் திரும்பிப் போவார்கள். சிறு பிள்ளைகளும், “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளும்” அங்கேயே இருந்து விடுவதற்காக அழைக்கப்படுவார்கள். “ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.” *வெளி. 20:15.*

கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் தேவனால் எப்படி படைக்கப் பட்டிருக்கிறார்கள், ஏன் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இருக்கின்ற விசுவாசமே, அவர்கள் அவரிடமிருந்து பெற்றிருப்பதை எப்படி கையாள்கிறார்கள் என்பதை தீர்மானிக்கும். ஏனென்றால், எல்லா மக்களின் மரபு வழியும் பின்னோக்கிச் சென்று ஆதாமை அடைகிறது. மனுக்குலத்துக்கு “நன்மை தீமை அறியக்கூடிய சக்தி” இருக்கின்றது. *ஆதி. 3:22.* எது நன்மையென்றும் எது தீமையென்றும் நாம் நம்புகிறோமோ, அதற்கேற்ப அவைகளை இரண்டு பிரிவுகளாக நமக்குள் வைத்திருக்கிறோம். நாம் வயதில் பெரியவர்களாகும்போது, நம்முடைய மனச்சாட்சிகள் அந்தப் பிரிவுகளை கவனமாக ஆராய ஆரம்பிக்கின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் தீமை என்று நம்புகின்ற ஒன்றை தேர்ந்தெடுக்கும் போது, குற்ற உணர்ச்சிக்கு ஆளாகின்றோம். நன்மை தராததும், பிரயோஜனமற்றதுமான ஒன்றே தீமையாகும். தாங்கள் எதற்காக படைக்கப்பட்டிருக்கிறார்கள், ஏன் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக்

குறித்த சத்தியத்தில் விசுவாசமில்லாமல் வயதில் பெரியவர்களாக வாழ்கின்றவர்கள், அவர்கள் செய்ய வேண்டிய ஒன்றை செய்யாமற் போனதற்காக தங்கள் வாழ்வின் மீதியுள்ள நாட்களெல்லாம் அல்லது அவர்கள் ஏன், எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்த விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளும் வரையிலும் தங்கள் குற்ற உணர்ச்சியோடு போராடவேண்டியிருக்கும். ஒன்று முதல் மூன்று வரையிலுள்ள பாடங்களில் கால வரிசை முறையில் தொடர்கிற சிந்தனை இதுதான். தேவன் மனுக்குலத்தை சிருஷ்டித்ததற்கான அவருடைய குறிக்கோளை நிறைவேற்றும் நிலையை மனுக்குலம் அடையும்படியாக, தமது கிருபையால் பாவம் மற்றும் மரணத்திலிருந்து அவர்களை மீட்பதைக் குறித்த அவருடைய வரலாற்றுக் கதையிடம் இது நம்மைக் கொண்டு செல்கிறது. கிறிஸ்தவர்களில் யாரெல்லாம் தங்கள் விசுவாசத்திற்கென்று இந்தப் பாதையை பின்பற்றாதிருக்கிறார்களோ, அவர்களெல்லாம் தங்களுடைய வேதபாடத்தில் கிருபை என்ற தலைப்பை புரிந்துகொள்ளவே முடியாது.

**பாடம் நான்கு**

"நன்மை தீமை அறியும்படி" மனுக்குலம் பெற்றுக்கொண்ட சக்தியானது, அவர்களுக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள உறவில் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது : முரண்பாடு அதிகரித்தது. வயதில் பெரியவர்களாக இருக்கும் மனிதர்களுடைய மனங்களில் நன்மை தீமை பற்றி இருக்கும் பிரிவுகளுக்கும், மனச்சாட்சியின் செயல்பாட்டிற்கும் இடையில் போராட்டம் அதிகரிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் வயதில் பெரியவனான பிறகு தனது உள்ளான மனிதனை, விசேஷமாக தன் நடத்தையை சோதித்தறிகிறான். நல்லதல்ல என்று நாம் நம்புகின்ற காரியத்தை செய்கின்ற போது, நம் ஒவ்வொருவருடைய உள்ளான மனிதனும் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகின்றது. நம்முடைய





மனச்சாட்சிகளில் உண்டாகின்ற குற்ற உணர்வு தேவனோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தை பாதிக்கின்றது. சமூக அங்கீகாரத்துக்காக மக்கள் தேவனை நோக்கி ஓடுவதற்கு பதிலாக, தங்கள் சிருஷ்டிகராகிய அவரை விட்டு விலகி ஒளிந்துகொள்ளுகிறார்கள்.

தேவனைப் பொறுத்த வரையில், வயதில் பெரியவர்களாக இருக்கும் எல்லா மனிதருமே பாவிகள் ஆகிவிட்டார்கள். ஆகையினால், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் முரண்பாடு அதிகரித்துவிட்டது. தேவன் "உன்னதத்திலுள்ள மகத்துவமானவராக" இருக்கிறார். *எபி. 1:3.* "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமை" அற்றவர்கள் ஆகிவிட்டார்கள். *ரோமர் 3:23.* ஏன்? "நன்மை தீமை அறியக்கூடிய சக்தி நமக்கு இருக்கின்றதே" அதனால் தான் பிரச்சனை: வயதில் பெரியவர்கள் நன்மை எது, தீமை எது என்று கற்றுக்கொள்ளுகிறபோது, அவர்களுடைய செயல்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள் ஆகிறார்கள்.

இந்த முரண்பாட்டினால் உண்டாகும் பிரச்சனைகளுக்கு விசுவாசத்தின் மூலம், தேவன் கிருபையை தீர்வாக வைத்திருக்கின்றார். இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்து நமது பாவங்களுக்கான "கிருபாதார பலியாக" தம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாகவே, தேவனுடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசமாய் இருந்தவர்களை, தேவன் நீதியுள்ளவர்களாக எண்ணினார். இப்பொழுது அவர், கிறிஸ்தவர்கள் இயேசுவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப்படுவதற்கு, புதிய பிறப்பினால் கிருபையை தருகின்றார். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் சந்தோஷத்தையும் அனுபவிக்கிறார்கள், ஆவிக்குரிய வளர்ச்சியையும் அடைகிறார்கள். *ரோமர் 4:25.* வயதில் பெரியவர்களாக இருக்கும் மற்ற மனிதர்கள் யாவருமே சாத்தானுடைய ராஜ்யத்தில் இருக்கிறார்கள்.

**பாடம் ஐந்து**

முதல் நான்கு பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ள வசனங்கள் மீது எந்த மனிதனுக்கு விசுவாசம் உண்டாகின்றதோ, அந்த மனிதனால் வேதத்திலுள்ள தேவனுடைய வரலாற்றுக் கதையை எளிதாக வாசிக்க முடியும். பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய வரலாற்றுக் கதையை வாசிப்பதற்காக கால வரிசை முறைப்படி விசுவாசத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம், கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டுக்குள் இடம்பெற்றுள்ள முக்கிய நிகழ்ச்சியினை ஒழுங்காக பின் தொடர்வதற்கு ஆயத்தமாக முடியும். தேவனுடைய வரலாற்றுக் கதையின் முக்கிய நிகழ்ச்சி, பிள்ளைகளை உருவாக்கும் அவருடைய நோக்கத்தோடு சம்பந்தப்பட்டுள்ளதால், மனுக்குலத்திற்கான தேவனுடைய சித்தத்துக்கு இடையூறு செய்யும்படியாக சாத்தான் வேலை செய்துகொண்டிருக்கிறான்.

ஆதாம் முதல் மோசே வரை வாழ்ந்தவர்களோடு தேவன் உடன்படிக்கைகள் பண்ணிக்கொண்டதன் மூலம், மனுக்குலத்துடன் தமது ஐக்கியத்தை நிலை நிறுத்துவதற்காக மெல்கிசேதேக்கின் ஆசாரியத் துவத்தை பயன்படுத்தி வந்தார். அவருடைய உடன்படிக்கைகள் ஜீவப்பிரமாணங்களையும் வாக்குத்தத்தங்களையும் உள்ளடக்கிய வைகளாக இருந்தன. *ஆதியாகமம் 26:4,5.* இயற்கையின் நியதியைப் போலவே ஜீவப் பிரமாணமும் பாவத்தை குற்றஞ்சுமத்துவதில்லை. அப்படியிருந்தாலும், ஆதாம் முதல் மோசே வரையிலும் வாழ்ந்தவர்களில் யாரெல்லாம் தேவனுடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் இல்லாதவர்களாய் இருந்தார்களோ, அவர்களையெல்லாம் மரணம் ஆண்டுகொண்டது. பார்க்கவும் *ரோமர் 5:12-14.* இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையைச் சார்ந்தது. கிறிஸ்தவன் தேவனை நெருங்கும்படியாக, செயல்படுகின்ற ஒரு ஆசாரியத்துவத்தின் மீதும் அவன் விசுவாசம் வைக்கவேண்டியது





அவசியமாகின்றது. இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தில் அவரே பிரதான ஆசாரியராக இருக்கின்றார். அவருடைய சொந்த இரத்தமே பாவத்திற்கான பலியாக இருக்கின்றது. ஜீவப் பிரமாணமும், கிறிஸ்தவர்களுடைய சுதந்தரத்திற்கான வாக்குத்தத்தமும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. *எபிரெயர் 10:12.* ஒரு நாளின் 24 மணி நேரமும் கிறிஸ்தவர்களுடைய பிரதான ஆசாரியராக இயேசு கிறிஸ்து ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். *1 யோவான் 2:1-3.*

**பாடம் ஆறு :**

பழைய ஏற்பாட்டிலுள்ள தேவனுடைய வரலாற்றுக் கதையில் அவருடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் உள்ளவர்களாய் வாழ்ந்த அவருடைய ஜனங்களை, தேவபக்தி இல்லாத திரளான ஜனங்களை விட்டு தனியாக பிரித்தெடுக்கும் அவருடைய பிரதான நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. தேவபக்தி இல்லாத இந்த ஜனங்களுடைய ஆவிகளும் தேவனிடமிருந்து வந்தவைகள் தான். அவர்கள் யாவருக்கும் நன்மை தீமை அறியத்தக்க சக்தி இருக்கிறது. அதனால் அவர்கள் வயதில் பெரியவர்கள் ஆகிவிட்ட பிறகு, அவர்களுடைய மனங்களிலும், மனச்சாட்சிகளிலும் உண்டாகும் குற்ற உணர்ச்சியோடு அவர்கள் போராட வேண்டியிருக்கிறது. அவர்கள் யாவருக்குள்ளும் தேவன் ஏற்படுத்தி யிருக்கின்ற இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கான நடைமுறைக்கு உகந்த திட்டம், அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய வாழ்க்கையை பாவமும், மரணமும் ஆளுகை செய்வதனால் உண்டாகும் விளைவை சுருக்கமாகத் தெரிந்துகொள்ள *ரோமர் 1:18-32; 5:21* வசனங்களை தயவுகூர்ந்து வாசியுங்கள்.

நோவாவின் காலத்தில் தேவன் ஒரு பிரதான நடவடிக்கையை மேற்கொண்டார். மறுபடியும் ஆபிரகாமின் காலத்திலும் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டார். *ஆதியாகமம் 12:1-3* வரை உள்ள

வசனங்களில் தேவன் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தங்களை, இயேசு கிறிஸ்து தமது பிதாவிடம் திரும்ப சென்று விட்ட பிறகு வாழ்ந்து வரும் எல்லா ஜனங்களும் புரிந்துகொண்டு, நம்பி, விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் யாவரும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். அதே சமயத்தில் ஆபிரகாமின் பிள்ளைகளாகவும் இருக்கிறோம். மேற்கண்ட நிலையில் ஒன்று இல்லாமல் மற்றொன்றில்லை. *கலாத்தியர் 3:26-29.* தேவன் ஆபிரகாமுக்கு செய்த "வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையை" கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்டதினால், அவர்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய் இருக்கிறார்கள். சிறு பிள்ளைகளோடு கூட தேவனுடைய ராஜ்யத்தில் குடியுரிமை பெற்றவர்களாய் இந்தப் பூமியின் மீது வாழ்பவர்கள், "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்" மாத்திரம் தான். ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களில் யூதருக்கும், புறஜாதியாருக்கும் இடம் இருக்கின்றது; ஆகையினால், இயேசு தமது பிதாவுக்காக கட்டிக் கொண்டிருக்கும் சபையானது "தேவனுடைய இஸ்ரவேல்" என்று அடையாளப்படுத்தப்படுகிறது. *கலாத்தியர் 6:16.*

**பாடம் ஏழு**

"தேவனுடைய மக்களுக்குள் அவருடைய ராஜ்யம்" இருப்பதைப் பற்றிய தலைப்பானது, இயேசு போதித்த மிகவும் ஆழமான நீதிநெறி சார்ந்த கட்டளைகளில் ஒன்றாக இருக்கின்றது. இருந்தாலும், அது மிகவும் எளிமையானதாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக ஆவதின் மூலம் தங்களுடைய விசுவாசக்கதவினை முட்டித் தள்ளி விரிவாக திறந்துகொண்டால் தான், தேவனுடைய ராஜ்யம் தங்களில் இருப்பதை புரிந்துகொள்ளவும், நம்பவும், விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளவும் முடியும். ராஜ்யத்திற்குரிய வாழ்க்கையைப் பற்றிய அவருடைய போதனைகளை நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும்





கற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினால் தான். அவருடைய சீஷர்களாயிருப்பதற்கான தகுதியை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இழந்து போனவர்களை தேடவும், இரட்சிக்கவும் இயேசு செய்கின்ற ஊழியத்தில் அவரோடு இணைந்துகொள்வது தான் கிறிஸ்தவர்களுடைய பிரதானமான பயிற்சியாக இருக்கின்றது. நம்முடைய விசுவாசம் "அக்கினியில் சோதிக்கப்பட்டிருக்கின்றது." நம்முடைய குணத்திலும், செயலிலும், நடத்தையிலும் இயேசுவுக்கு ஒப்பாக ஆவதினால், அதற்கு ஏற்றபடி நாம் சோதிக்கப்படுகிறோம்.

ஒரு கிறிஸ்தவனுடைய வளர்ச்சிப் பாதையில், திட்டமான கால வரிசை முறைப்படி இடம்பெறும் அந்தஸ்தை ஏழாம் பாடத்தில் உள்ள தலைப்பு பெறவில்லை. இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து பூமிக்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் என்னவென்றால், கிறிஸ்தவர்களுக்குள் தேவனுடைய ராஜ்யத்தை இடம்பெறச் செய்வது தான். *லூக்கா 17:20,21.* இந்த வசனங்கள் நம்முடைய பிறப்பு முதல் நாம் கல்லறைக்கு செல்லும் வரையிலும் நம் வாழ்க்கையோடு தொடர்புடைய தேவனுடைய நோக்கத்தை நிழலிட்டுக் காண்பிக்கின்றன. இவைகள் நாம் பெறப்போகின்ற சுதந்தரத்தை முன் கூட்டியே தெரிவிக்கின்றன. *ரோமர் 8:18-25.* தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக சிறு பிள்ளைகளை இயேசு நிறுத்தினார். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான சுவீகார உரிமைப் பெற்றிருக்கிறோம். ஆகையினால், நாம் அவருடைய ராஜ்யத்தையும், அங்கு வாழும் உரிமையையும் சுதந்தரித்துக் கொள்ளுகின்றோம். *வெளி. 21:7.*

கிறிஸ்தவர்களாகிய நாம் பழைய ஏற்பாட்டை வாசிப்பதோடு கூட அதைக் குறித்து "ஆழ்ந்து தியானிக்க" அல்லது "ஆழ்ந்து சிந்திக்க" ஊக்குவிக்கும்படியாக, கால வரிசை முறைப்படி இந்தப் புத்தகத்தில் ஏழாம் பாடம் இடம்பெற்றுள்ளது. மக்களோடு தேவன் இணைந்து செயல்படுவதை

நாம் பார்க்கிறோம். யாரெல்லாம் விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தார்களோ, அவர்களுடைய வாழ்க்கையை தம்முடைய ராஜ்யத்துக்கு உகந்ததாக ஆக்கும்படி அவர் செயல்புரிந்து வந்தார். அவருடைய ராஜ்யத்தை தங்களுக்குள் கொண்டிருந்த ஒரு ஜனம் அங்கே மீதியாயிருந்து, அவர்களில் சிலரை *எபிரெயர் 11*ஆம் அதிகாரம் அடையாளம் காண்பிக்கிறது. பழைய ஏற்பாட்டில் மனிதர்களோடு நிகழ்ந்த ஒவ்வொரு சந்திப்பிலும், தேவன் தம்மை வெளிப்படுத்தினார். ஒவ்வொரு தனி நபர் வரலாறும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தேவன் என்ன செய்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றது. நாம் இப்படி கேட்கிறோம்: "இந்த பின்னணியில் இந்த வரலாற்றுக் கதை இடம் பெற்றது ஏன்?" பிறகு, "தேவன் என்ன செய்தாரோ அது, நாம் படைக்கப்பட்ட விதத்தோடும் நமது படைப்பின் நோக்கத்தோடும் எப்படி சம்பந்தப்பட்டுள்ளது?" தேவனுடைய எல்லாப் பிரதான நடவடிக்கைகளையும், விசேஷமாக, இயேசுவை மையமாகக் கொண்டு அவர் மேற்கொண்ட பிரதான நடவடிக்கைளையும் நாம் புரிந்து கொண்ட பிறகு, தேவனுடைய ராஜ்யத்தை எங்கே கண்டுபிடிக்க முடியும் என்பதைக் குறித்த இயேசுவின் எளிமையான, ஆழமான அறிவிப்பை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாக முடியும். *மத்தேயு 6:10.* தேவனுடைய ராஜ்யத்துக்கு உகந்த வாழ்க்கை கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருடைய "உள்ளான மனிதனிலும்" அவர்களுடைய நடத்தையிலும் காணப்படுகின்றது. இது கனம், மகிமை மற்றும் சமாதானம் ஆகிய தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கான நம்பிக்கையை நமக்குத் தருகிறது. *ரோமர் 2:6-11.* இயேசு வெளிப்படும் போது, நம் ஒவ்வொருவருடைய "உள்ளான மனிதனுக்கும்" நித்திய கனமும், மகிமையும், சமாதானமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்கின்றோம். *1 பேதுரு 1:7.* நமது இயல்பான தேவைகளாய் இருக்கின்ற இவைகளில் ஒன்றை திருப்திப்படுத்திக்கொள்வதற்கான நம்பிக்கை





எவனுக்கு இல்லையோ, அவன் மன அமைதி இல்லாதவனாகவே இருப்பான்; நிம்மதியற்றவனாகவும் துக்கப்படுகிறவனாகவும் இருப்பான்.

**பாடம் எட்டு :**

பரிசுத்த வேதாகமத்தின் நான்கில் மூன்று பகுதிகள் லேவிய ஆசாரியத்துவ காலத்தைப பற்றி தெரிவிப்பதால் தேவன் நியமித்ததும் அடிமைத்தனத்தின் நுகமாக இருந்த பிரமாணத்தை உடையதுமான லேவிய ஆசாரியத்துவத்தை ஏன் அவர் நியமித்தார் என்ற காரணத்தை தெரிந்து கொள்ளவேண்டிய கட்டாயத்தில் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். *கலாத்தியர் 5:1.* பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், அதைக் கைக்கொள்ளாதவர்களை அது அடிமையாக்கு கின்றது. *ரோமர் 3:20.* ஜனங்கள் வயதில் பெரியவர்களாகி, பாவத்தைக் குறித்த விழிப்புணர்வை பெற்றுக்கொண்ட பிறகு, எப்படி அடிமைத் தனத்திற்குள்ளாக்கும் ஒரு நுகமாக பாவம் மாறுகிறது என்பதை *ரோமர் 7:7-25* வசனங்களில் பவுல் விளக்குவதை பாருங்கள். தேவன் இயேசுகிறிஸ்துவை அனுப்புவதற்கு நியமித்திருந்த காலம் வரும் வரையிலும், லேவிய ஆசாரியத்துவ காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் "காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும்" கீழ்ப்பட்டிருக்க வேண்டியிருந்தது. *கலாத்தியர் 4:2.* புதிய ஏற்பாட்டிலுள்ள தேவனுடைய வரலாற்றுக் கதையை, கிறிஸ்தவர்கள் ஆகிய நாம் அறிவுப் பூர்வமாக பின்தொடருவதற்கு "லேவிய ஆசாரியத்துவத்தின் நோக்கத்தை" புரிந்துகொள்ளவேண்டும்.

கிறிஸ்தவர்களும், பரிசுத்த வேதாகமத்தை எப்படி வாசிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்ள விரும்பும் மற்ற மக்களும் இந்த தலைப்பை கால வரிசை முறைப்படி படிக்கவேண்டியிருப்பது ஏன் என்பதை பின்வரும் கருத்து விளக்குகின்றது.

தயவு கூர்ந்து கவனியுங்கள்: லேவிய ஆசாரியத்துவத்துக்குரிய பிரமாணமானது பாவிகளை குற்றஞ்சாட்டாத மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்துக்குரிய பிரமாணத்தைப் போல் இல்லாமல், பாவிகளை குற்றஞ்சாட்டும் பிரமாணமாக மாற்றப்பட்டது. தேவன் மோசேயின் மூலம் இதைக் கொடுத்தார். அவர் லேவிய ஆசாரியத்துவ முறைமையை இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவ முறைமையாக மாற்றினபோது, நியாயப்பிரமாணம் மீண்டும் ஜீவப்பிரமாணமாக மாற்றப்பட்டது. *எபிரெயர் 7:11-17.* ஜீவப் பிரமாணமும், இயற்கையின் நியதியைப் போல அதை மீறிநடப்பவர்களை குற்றஞ்சாட்டுவதில்லை. இரண்டு பிரமாணங்களும் ஜீவனை விவரிப்பவையாக இருக்கின்றன. நம்முடைய ஆவிகளுக்கான ஜீவப் பிரமாணத்தை குறித்து தெரிந்துகொள்ளாத ஒருவன், இயற்கையின் நியதியைக் குறித்து தெரிந்துகொள்ளாதவன் எந்த நிலைமையில் இருப்பானோ, அதே நிலைமையில் தான் இருப்பான். இரண்டு நிலைகளிலும் ஜீவன் இல்லை.

தாங்கள் ஏன், எப்படி படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியாதவர்களும், ஆதாமும் ஏவாளும் உடன்படிக்கையை மீறினதினால் தங்களுடைய மனதில் பெற்றுக்கொண்ட சக்திகளால் தங்களுக்கு கிடைத்தது என்ன என்று அறியாதவர்களும், ஆபிரகாமுடைய பிள்ளை என்ற அடையாளத்தை பெறாதவர்களும், புதிய உடன்படிக்கையையும், தேவன் நம்முடைய இருதயங்களிலும் மனங்களிலும் எழுத விரும்புகின்ற ஜீவப் பிரமாணத்தையும் அறியாதவர்களுமாய் இருப்பவர்கள் எவர்களோ, அவர்கள் லேவிய ஆசாரியத்துவத்தின் நோக்கத்தை புரிந்துகொள்ளும் நிலைமையில் இல்லை. கால வரிசைமுறைப்படி வேதபாடத்தை கற்றுக்கொள்ளாமல், ஆசாரியத்துவத்தை தேவன் மாற்றியதற்கான





நோக்கத்தை விளக்க முயற்சிப்பது ஞானமுள்ள செயல் அல்ல. லேவிய ஆசாரியத்துவம் உருவாக காரணமாக அமைந்த சூழ்நிலையைக் குறித்து பல தவறான கருத்துக்களை மக்கள் பரப்பி வருகிறார்கள்.

இப்புத்தகத்தின் முன்னுரையிலும், அதை தொடர்ந்துள்ள பாடங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களின் மீது விசுவாசம் உள்ள கிறிஸ்தவர்களாக நாமிருந்தால், லேவிய ஆசாரியத்துவம் கொடுக்கப்பட்டதன் நோக்கத்தைக் குறித்து ஆராய்ந்து பேசுவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோம் என்று அர்த்தம். எல்லா தேசங்களில் இருந்தும் தமக்கென்று பிள்ளைகளை உருவாக்குவதற்காக யாக்கோபுடைய சந்ததியாரிடத்தில் தமது திட்டத்தை செயல்படுத்தும்படி, தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தங்களை பண்ணினார் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். ஆபிரகாமுடைய "விசுவாசம் பூரணப்பட்டதென்று" நாம் காண்கிறோம். *யாக்கோபு 2:22.* ஆகையினால், பூமியின் மீது வாழ்ந்த மனுக்குலத்தின் மீதமுள்ள சரித்திரத்தை, தேவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட வாக்குத்தத்தங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். மோசே எகிப்தை விட்டு வெளியே அழைத்து வந்த இஸ்ரவேலரில் அநேகர், பாவிகளாய் இருந்தார்கள் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அப்படியிருந்தாலும் அவர்களில் அநேகர் அதை அறியவில்லை. மோசேயின் நியாயப்பிரமாணமானது அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தியது. ஆபிரகாம் மூலமாக உருவான வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்கு தேவன் உண்மையுள்ளவராக இருப்பதினால், மோசே மற்றும் இஸ்ரவேலோடு அவர் தமது பிரதானமான நடவடிக்கையை மேற்கொண்டார். பார்க்கவும் *ரோமர் 3:1-4.*

**பாடம் ஒன்பது**

"தேவனுடைய தேசம்" என்ற தலைப்பையும், "தேவனுடைய ராஜ்யத்தில் தீர்க்கதரிசிகளின் பயன்பாடு" என்ற பத்தாம் பாடத்தையும்,

எட்டாம் பாடத்தின் பின்னணியிலேயே படிக்க வேண்டும்; நாம் அவைகளை கால வரிசை முறைப்படி படிக்கவேண்டியது அவசியம். எடுத்துக்காட்டாக, “காரியக்காரரும் வீட்டு விசாரணைக்காரரும்” இஸ்ரவேல் ஜனங்களை கட்டுப்படுத்தும்படி தேவன் ஏற்பாடு செய்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவருடைய தேசத்து குடிமக்களாக இருக்கப்போகும் மக்களுக்காக இஸ்ரவேல் தேசம் உருவாக்கப்பட்டது. பிற்பாடு உருவாகப்போகும் தேசத்துக்கான பல்வேறு சட்டங்களையும் வனாந்திரத்தில் இருந்தபோது தேவன் மோசே மூலம் கொடுத்தார். இஸ்ரவேல் தேசத்தின் தலைவர்கள் தங்களுக்கென்று சொந்தமாக அரசியல் அமைப்பு சட்டங்களை எழுதவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாதிருந்தது. தேவன் கற்பலகைகளில் எழுதிக்கொடுத்தவைகளோடு கூட, தனி மனிதனுடைய வாழ்க்கைக்கும், தலைவர்கள் வழி நடத்துவதற்கும் தேவையான சட்டங்களை மோசே ஒரு புத்தகத்தில் எழுதினான். *உபாகமம் 31:24-26.*

தேவன் தம்முடைய தேசத்தை புறஜாதிகளுக்கு நற்செய்தி அறிவிப்பதற்கு பயன்படும் கருவியாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். இருந்த போதிலும், அவர்கள் வருத்தத்திற்குரிய வகையில் அதில் தோல்வியடைந்தார்கள். இஸ்ரவேலர்களை மற்ற புறஜாதிகளுடைய கலாச்சாரத்தினால் உண்டாகும் ஆபத்துக்கு விலக்கி வைக்கும்படி, மாம்சத்துக்குரிய எல்லைகளோடு கூடிய ஒரு தேசமாக அவர் அமைத்தார். இந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. ஆனாலும், விசுவாசத்தினால் வாழ்ந்தவர்களுக்குள் தமது பரலோக ராஜ்யத்துக்கேற்ற ஆவிக்குரிய வாழ்க்கையை உருவாக்கும்படி அவர் பொறுமையாக செயல்பட்டுக் கொண்டிருந்தார். தேவனுடைய ராஜ்யத்தின் மனிதர்களுக்குரிய பகுதியாக இஸ்ரவேல் தேசம் இருந்தது. ஆனாலும் கூட இஸ்ரவேலை ஆளும் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின் மேல் உட்காருகிறதற்கு அவர் சாலொமோன் போன்ற மனிதர்களுக்கு அனுமதி கொடுத்தார். *1 நாளாகமம் 28:5.*





**பாடம் பத்து :**

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார், எப்படி உணருகிறார் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் புரிந்துகொள்ள, பரிசுத்த வேதாகமத்தில் அவர் தெரிவிக்கின்ற வரலாற்றுக் கதைகளை வாசிக்கின்றோம். தீர்க்கதரிசிகள் தங்களுக்காக பேசாமல் தேவனுக்காக பேசினார்கள். இஸ்ரவேலர் தேவனுடைய சித்தத்துக்கு கீழ்ப்படியாத நேரங்களில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒவ்வொரு நாளின் உண்மை நிலையைக் குறித்தும் தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் பேசுவதை நாம் கேட்க முடியும். இந்தக் காட்சி தொகுப்புகளில் தேவன் மக்களிடம் நேரடியாக பேசுவதை நாம் கேட்கும்படிக்கு, தீர்க்கதரிசியையும் இஸ்ரவேலர்களையும் தூர வைத்துவிடலாம். *மீகா 2:1-11* வரை உள்ள வசனங்களை வாசிக்கும் போது இஸ்ரவேலர்களையும் மீகாவையும் நீக்கி விட்டு வாசிக்க முயற்சி செய்யுங்கள். இன்றைக்கு அநேக நாடுகளில் எது போன்ற சூழ்நிலைகள் இருக்கின்றனவோ, அதே போன்ற சூழ்நிலைகளைக் குறித்து தேவன் பேசுவதை கேட்க முடியும். நாம் தேவன் பேசுவதை கேட்க வேண்டியது அவசியம்; அப்பொழுது தான் அதைக் குறித்து தெரிந்துகொள்ள முடியும். தேவனுடைய குமாரன் மாம்சத்தில் வந்ததற்கு, அவர் தேவனை வெளிப்படுத்துவதும் ஒரு காரணமாக இருந்தது. *யோ.14:7.* இயேசு இஸ்ரவேலர்களை இப்படியாகக் கண்டித்தார்: “என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்?” *யோவான் 8:43.* யூதர்கள் தேவனை அறிந்திருந்தார்களானால், இயேசுவையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். தேவன் இஸ்ரவேலருக்கு என்னவெல்லாம் செய்தார் என்பதை விளக்குகின்ற அவருடைய வரலாற்றுக் கதைகளை அவர்கள் கேட்டு வளர்ந்ததினால், தேவனை அறிந்திருக்க வேண்டும். இஸ்ரவேலர்கள் தேவன் தங்களுக்கு ராஜாவாக இராதபடிக்கு அவரை புறக்கணித்த போதிலும் கூட, தீர்க்கதரிசிகள் மூலமாய் அவர் அவர்களிடம் பேசினார்.

**பாடம் பதினொன்று :**

முன்பு சொல்லப்பட்ட காலவரிசை முறைப்படியான தலைப்புகளின் சுருக்கமாக இந்தப் பாடம் இருக்கின்றது. நான்கு சுவிசேஷ புத்தகங் களையும் புரிந்துகொள்ளுதலோடு வாசிப்பதற்கு கிறிஸ்தவர்களுக்கு உதவும்படியாகவே இந்தப் பாடம் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு முன்பு வாழ்ந்த தேவனுடைய மக்களுக்கும், முதலில் கிறிஸ்தவர்கள் ஆனவர்களுக்கும் கிடைக்காத ஒரு பெரிய நன்மை இக்காலத்தில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிடைத்திருக்கின்றது. முழு வரலாற்றுக் கதையும் நம்மிடத்தில் எழுத்து வடிவத்தில் வேதாகமமாக தரப்பட்டுள்ளது. இதுவே அந்த நன்மை. நமது வேதபாடங்களில் தேவனுடைய வரலாற்றுக் கதையை ஒவ்வொரு முறை படிக்கும்போதும், ஆரம்பத்திலேயே நம்மால் முடிவைப் பார்க்க முடியும். நாம் ஏற்கனவே படித்த வேத பாடங்களால் நமது “விசுவாசத்தின் கதவு” இன்னும் சிறிது விரிவாக திறக்கப்படுவதால், நாம் மேற்கொண்டு வேதத்தை படிப்பது புது அனுபவத்தைக் கொடுக்கும். நம்முடைய இருதயங்களிலும் மனங்களிலும் தேவனுடைய ஜீவப் பிரமாணம் ஏற்கனவே எழுதப்பட்டிருப்பதால், கால வரிசை முறைப்படி நாம் வேதத்தை படிப்பது நமக்கு ஒரு புதிய மகிழ்ச்சி தரும் அனுபவமாக இருக்கும். *எபிரெயர் 8:10.* இங்கே “எழுதுவது” என்பது தேவனுடைய ராஜ்யத்தின் கலாச்சாரம் நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் வளர்ச்சி பெறுவதை குறிக்கின்றது. தேவனுடைய வார்த்தையின் மீது நமக்கு இருக்கும் விசுவாசத்தினாலும், நமது கற்பனை சக்தியினாலும் அவரையும் அவருடைய ராஜ்யத்தையும் நம்மால் பார்க்க முடிகிறது. தினசரி வேதப் புத்தகத்தில் தேவனைப் பற்றியும், அவர் நமக்காக என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியும், நாம் வாசிப்பதை கற்பனை செய்து மகிழ்ச்சியடைவதற்கு நமக்கு உதவியாக இருப்பது,





மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்திருக்கிற விசேஷித்த சக்தியான கற்பனை சக்தியாகும். நம்முடைய விசுவாசம் தினசரி வாழ்வில் நடைமுறைக்கு வருகின்றது. *எபிரெயர் 11:1,6.*

நாம் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி தொடர்ந்து செயல்படுவற்கு வேண்டிய பொறுமை நம்மிடம் இருக்கிறதா என்று நம்மை நாமே “சோதித்து அறிவதற்கு” இந்தப் பாடத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். *யாக்கோபு 1:4.* பொறுமை என்பது விசுவாசப் பரீட்சையின் பலனாக வருகின்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் இந்தப் பரீட்சையில் அதிகமதிகமாக மதிப்பெண்களை பெறுவதினால், நமது விசுவாசம் பூரணப்படுத்தப் படுகின்றது. தெய்வீக ஆவிக்குரிய சத்தியத்தின் மீது நமக்கிருக்கும் விசுவாசம், ஆபிரகாமைப் போல நம்மையும் விசுவாச வீரர்கள் ஆக்குகின்றது.

**பாடம் பன்னிரண்டு :**

நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் காணப்படும் தேவனுடைய வரலாற்றுக்கதை லேவிய ஆசாரியத்துவ காலத்தைச் சார்ந்தது. மோசேயைப் போன்று தேவனுடைய தீர்க்கதரிசியாக இயேசு இஸ்ரவேலுக்கு ஊழியம் செய்தார். *அப்போஸ்தலர் 3:22,23.* நசரேயனாகிய இயேசு “கிறிஸ்துவாக” இருந்ததினால், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவரிடம் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளுகிறோமோ, அதுவே பிற்காலத்தில் சபையின் பிரயோஜனத்துக்கென்று சுவிசேஷ புத்தகங்களாக எழுதப்பட்டது. அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்திலும், அதற்கு பிற்பாடும் அப்போஸ்தலர்களுடைய சுவிசேஷமாக இருந்தது அவருடைய போதனைகள் தான். நான்கு சுவிசேஷ புத்தகங்களும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட நான்கு கிறிஸ்தவ எழுத்தாளர்களால்

எழுதப்பட்டுள்ளன. *யோவான் 16:12,13.* இந்த எழுத்தாளர்கள் கால வரிசை முறைப்படி தங்கள் வரலாற்றுக் கதைகளை எழுதுவதற்கு தனி நபர் வரலாறுகளை தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் உருவாக்கி இருக்கின்ற தெய்வீக இலக்கியம் ஒரு கதை வடிவத்தில் கொடுக்கப்பட்டு இருப்பதால், வேதத்தை கற்றுகொள்ளும் மாணவர்கள், ஒரு கதையை வாசிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய "மூன்று நிலை" கொள்கையை இதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

ஒரு தனி நபர் பற்றிய கதையை நாம் வாசிக்கின்றோம். தேவன் என்ன செய்தார் என்பதை கவனிக்கிறோம். பிறகு, அவர் என்ன செய்தாரோ அது நாம் பிறந்திருப்பதற்கான காரணத்தோடு எப்படி சம்பந்தப்படுகிறது என்பதை புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம். இந்த எளிமையான உண்மைகளை அறியாமல் வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கள், இவைகளில் மறுபடியும் மறுபடியும் இடறி விழுவார்கள். சுவிசேஷ புத்தகங்களில் உள்ள இயேசுவின் போதனைகளை மூன்று வகையான மக்கள் கூட்டங்களுக்கு பொருத்தமானவைகளாக புரிந்துகொள்வதில் கிறிஸ்தவர்கள் தோல்வி அடைவார்களானால், அதுவே அவர்களுடைய வெற்றிக்கு தடையாக அமைந்து விடும்.

**ஒன்று,** இயேசுவின் போதனைகளை நேரடியாக கேட்ட **யூதர்கள்.**

**இரண்டு,** ஒன்றாம் பாடம் முதல் மூன்றாம் பாடம் வரையிலும் வேத வசனங்களின் அடிப்படையில் வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கைகள் **எல்லா மக்களுக்கும்** போதிக்கப்பட்டன.

**மூன்று** இறையியல், நீதிநெறிகள் மற்றும் செயல்முறைகள், ஆகியவற்றை **கிறிஸ்தவர்களுக்காகவும்**, கிறிஸ்தவர்கள் ஆக விருப்பங்கொண்டவர்களுக்காகவும் மாத்திரம் இயேசு போதித்தார்.





வேதாகமத்திலுள்ள ஒரு புத்தகத்தை வாசிப்பவர், அந்த எழுத்தாளர் தான் எழுதியதை பெற்றுக்கொள்பவர்கள் எதை அறிந்திருந்ததாக நினைத்து எழுதினாரோ, அதை கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அவர் அதை புரிந்துகொள்ளுதலுடன் வாசிக்க முடியாது. சுவிசேஷ புத்தகங்களிலும், அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் சொல்லப்படும் தேவனுடைய வரலாற்றுக் கதையில், அவருடைய நடவடிக்கைகளை கிறிஸ்தவர்களாகிய நாம் வாசித்து புரிந்து கொள்வதற்கு, பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள அவருடைய நடவடிக்கைகளை கவனமாக பின் தொடரவேண்டியது அவசியமாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தாங்கள் எழுதியவைகளை பெற்றுக்கொண்டவர்கள் தாவீதையும், ஆபிரகாமையும் குறித்து அறிந்தவர்கள் என்ற எண்ணத்துடனேயே பெரும்பாலும் எழுதியிருக்கிறார்கள். ஆகையினால், அவர்கள் எழுதியவைகளை பெற்றுக்கொண்டவர்கள் ஆபிரகாமையும் தாவீதையும் குறித்து அறிந்திருந்தவைகளை நாமும் அறிந்துகொள்ளவேண்டும். அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கின்ற இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய ஒரு தொடர்ச்சியான கதையாக தேவனுடைய வரலாற்றுக் கதை அமைந்திருக்கும் விதத்தை கிறிஸ்தவர்கள் காணும் படிக்கு, சுவிசேஷ புத்தகங்களை பழைய ஏற்பாட்டோடு தொடர்புபடுத்துவதே 12, 13ஆம் பாடங்களின் நோக்கமாக இருக்கின்றது. *எபிரெயர் 2:10.* 12ஆம் பாடம் யோவான் எழுதின சுவிசேஷத்திற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

அவனுடைய முன்னுரை, கிறிஸ்தவர்களுடைய விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியின் ஆதாரமான விஷயத்தை முன் வைக்கிறது:

1:4-5 "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது

அதைப் பற்றிக்கொள்ளவில்லை.”

1:12 “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.”

1:17 “கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.”

என் சித்தமல்ல, என் பிதாவின் சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போலவே, பூமியிலேயும் செய்யப்படவேண்டும் என்று இயேசு அடிக்கடி அறிவித்ததாக பல உரையாடல்களை யோவான் பதிவு செய்தான். பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுவதால் உண்டாகும் ஆசீர்வாதங்களையும், “கழுவும் பாத்திரத்தையும், சீலையையும்” தெரிந்துகொள்ளும் கிறிஸ்தவ தலைமைப் பண்பையும் அவன் அறிமுகப்படுத்தினான். *யோ. 7:37-39; 13:2-5.*

**பாடம் பதின்மூன்று :**

இயேசு கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும் இடையில் மூர்க்கமாக யுத்தம் நடப்பதை, ஒத்த அமைப்புக்கொண்ட சுவிசேஷங்களில் இடம் பெற்றுள்ள தேவனுடைய வரலாற்றுக் கதை வெளிப்படுத்தியது. ஜீவனைக் குறித்து போதிக்கும்படியாகவும், சிலுவையின் மீது மரணம் அடைவதின் மூலம் மரணத்தின் மீதிருந்த சாத்தானின் அதிகாரத்தை அகற்றவும், தேவன் “தம்முடைய குமாரனை” மனுஷ குமாரனாக பூமிக்கு அனுப்பினார். சாத்தானுடைய சேனைகளுக்கு எதிரான யுத்தத்துக்கு பயிற்சி கொடுக்கும்படியாக இயேசு சில ஆண்களையும், பெண்களையும் தேர்ந்தெடுத்தார். தேவன் தம்முடைய மக்களுக்காக லேவிய ஆசாரியத்துவத்தின் மூலமாக ஏற்படுத்தியிருந்த திட்டங்களை, சாத்தானுடைய மக்கள் தங்களுடைய கட்டுப்பாட்டுக்கு கொண்டுபோய்





விட்டார்கள். இந்த அமைப்பின் எலும்புக்கூடு மாத்திரமே மீதியாயிருந்தது. இருந்த போதிலும், மத/அரசியல் செல்வாக்கு உடையவர்களால் அது அசுத்தப்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து, இஸ்ரவேல் ஜனங்களோடு கூட பரிசேயருக்கும் சதுசேயருக்கும் பிரசங்கித்தார். அவர் தேவனுடைய ராஜ்யத்திலுள்ள ஜீவப் பிரமாணத்தை போதிப்பதற்கு இயற்கையை பற்றிய உவமைகளையும், சட்டத்திற்கு மாறாக மக்கள் செய்துவந்த செயல்களையும் பயன்படுத்தினார். இந்தப் பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதன் மீதும் தேவன் வைத்துள்ள அன்பை சுவிசேஷங்களிலுள்ள தேவனுடைய வரலாற்றுக்கதை வெளிப்படுத்தியது. அவர் தம்முடைய நித்திய ராஜ்யத்தில் தமது குமாரனைப் போல, அநேகம் பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதற்கு சித்தம் உள்ளவராய் இருந்தார். இதற்காகவே தமது குமாரனை சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்.

**பாடங்கள் பதினான்கு-பதினேழு :**

நான்கு சுவிசேஷங்களையும் படிப்பதற்கு நம்முடைய மனங்களையும் இருதயங்களையும் ஆயத்தப்படுத்துவதற்காகவே ஒன்று முதல் பதின்மூன்று வரை உள்ள பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கிருபையையும் சத்தியத்தையும் பற்றி சுவிசேஷங்களில் தான் நாம் புரிந்துகொள்கிறோம். “இரட்சகராகவும் அதிபதியாகவும்” இருக்கிற இயேசு தமது ஆளுகைக்காக இரண்டையும் போதித்தார். *அப்போஸ்தலர் 5:31.* ராஜவாக இருக்கின்ற இயேசு, தமது குடிமக்களுக்காக ஜீவனைக் குறித்த சத்தியத்தை வெளிப்படுத்தினார். இயேசு “ஆதாமுக்குள்” இந்தப் பூமியின் மீது வாழ்ந்ததின் மூலம், நமது பிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்வதற்கு தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டார். “கிறிஸ்துவுக்குள்” கிறிஸ்தவர்கள் கிருபையைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார்.

தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தபடி கிறிஸ்துவை அனுப்பியதே, சுவிசேஷங்களில் இடம்பெற்றுள்ள அவருடைய பிரதான நடவடிக்கையாக இருக்கின்றது. அவருடைய ஆளுகைக்காக இயேசுவின் போதனைகளை காலவரிசை முறைப்படி தெளிவாக ஒன்று சேர்ப்பது கடினமான காரியமாக இருக்கலாம். ‘‘கிறிஸ்துவுக்குள்’’ என்று அடையாளப்படுத்தப்படுகின்ற புதிய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்ற கிறிஸ்தவர்கள் “ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களின் மீதும்” விசுவாசம் வைக்கவேண்டியது அவசியமாய் இருக்கின்றது. விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் அனுபவித்து மகிழும்படி நமது பிதாவாகிய தேவன் இவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். அவைகள் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டு உள்ளன. பார்க்கவும் *எபேசியர் 1:3-14. அப்போஸ்தலர் 1,2* அதிகாரங்களில் லூக்கா குறிப்பிட்ட தலைப்புகளை கால வரிசை முறைப்படி எழுதிவைத்தான்.

முதலாவதாக, தேவனுடைய வலதுபாரிசத்தில் தமக்குரிய இடத்தில் இருக்கும்படி இயேசு பரலோகத்திற்கு திரும்பிச் சென்றார். *அப்போஸ்தலர் 7:56.* அவர் தேவனுடைய ராஜ்யத்தின் சிங்காசனத்தின் மீது உட்காரவில்லை என்பதை கவனியுங்கள். *1 தீமோத்தேயு 6:13-16.* அடுத்ததாக, அப்போஸ்தலர்கள் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த செய்தியை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு உதவும்படி பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பரலோகத்திற்கு தேவனுடைய குமாரன் மீண்டும் வந்து சேர்ந்துவிட்ட பிறகு, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலரோடு கூட இணைந்து செயல்பட்டு, எருசலேமில் ஒரு சுவிசேஷ கூட்டத்தோடு இயேசுவின் ஊழியத்தை ஆரம்பித்தார். இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள் உட்பட பல இஸ்ரவேலர்கள் இதன் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டார்கள்.





**பலன்கள் :**

சாத்தானுடைய ராஜ்யத்தை விட்டு மூவாயிரம் பேர் வெளியே அழைக்கப்பட்டார்கள். அவர்கள் இயேசுவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப் பட்டார்கள். “வெளியே அழைக்கப்பட்ட” மக்கள் இவர்கள் தான். இதனால் இவர்கள் “சபை” என்று குறிப்பிடப்படுகிறார்கள். சபை என்ற வார்த்தைக்கு இதுதான் அர்த்தம். கிறிஸ்தவர்கள் தனியாக ஒரு சங்கத்தை உருவாக்கவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் யாவரும் புதிதாக பிறந்ததன் மூலமாக நேரடியாக கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப்பட்டிருக் கிறோம். “தேவனுடைய சபை” அல்லது “கிறிஸ்துவின் சபையார்” என்று சபை குறிப்பிடப்படுகிறதே ஒழிய சபை என்பது ஒரு சிறப்புப் பெயராக வேதத்தில் ஒருபோதும் பயன்படுத்தப்படுவதில்லை. சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து வெளியே அழைத்துவரப்பட்டு கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்ட மக்களை அடையாளப்படுத்துவதற்காக இது பயன்படுகிறது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்கள் என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஏனெனில், பாவிகளை தம்முடைய ராஜ்யத்திற்குள் அழைக்கும்படி அவர்களிடம் பிரசங்கிப்பதற்காக, அப்போஸ்தலர்களிடம் இயேசு இதைத்தான் போதித்தார்.

முந்தைய பாடங்களில் உள்ள வசனங்களையும், அவைகளின் பயன்பாட்டைக் குறித்த என்னுடைய எண்ணங்களையும் ஆழ்ந்து ஆராய்கின்ற ஒவ்வொருவருக்கும் முந்தைய பாடங்கள் உதவிகரமாக இருக்கவேண்டும் என்பதே என்னுடைய ஜெபம். கிறிஸ்தவர்கள் சொந்தமாக தங்களுடைய நம்பிக்கைகளுக்காகவும், விசுவாசத்திற் காகவும், புரிந்துகொள்வதற்காகவும் அவர்களாகவே வேதத்தை படிப்பது எவ்வளவு எளிமையானது என்று பார்க்கும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். கிறிஸ்தவமாக காட்டப்படுவது எதுவோ அதை கள்ளத் தீர்க்கதரிசிகளும், பொருளாசையுள்ள

மனிதர்களும், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். ஆகையினால், கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு மெய்யான சீஷர்களாய் இருக்கவேண்டியது அவசியம்.

ஆவிக்குரிய வளர்ச்சி அடைய முடியாமல் போராடிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு உதவும்படியாக, கால வரிசை முறைப்படி நமது வேதபாடம் உண்டாக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பாடத்தின் தலைப்பையும் ஆழ்ந்து ஆராயவேண்டும். இந்தத் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைக் குறித்து அவர்கள் தெளிவு பெறாமலும், அதன் மீது விசுவாசம் வைக்காமலும் போனால், அதுவே அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக வளர்ச்சி அடைய போராடுவதற்கு காரணமாக அமையும். ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை படிப்பதன்மூலம், அந்தந்த தலைப்பைக் குறித்து நமக்குத் தெளிவு உண்டாகும்.

இந்தப் பூமியில் இருக்கிற ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய பிள்ளையாக இருக்கும்படி படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை புரிந்து கொள்ளுகிற கிறிஸ்தவர்கள், தேவனுடைய மக்களை அடையாளப் படுத்துவதற்கு வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வித்தியாசமான தனி வகை சொற்களையும்/சொற்றொடர்களையும் எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும். சுவிசேஷங்களில் இயேசுவால் போதிக்கப்பட்ட கிறிஸ்தவ இறையியல், நீதி நெறிகள், செயல்முறை ஆகியவற்றை படித்து அறிந்துகொள்வதற்காக 14 முதல் 17 வரையிலான பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தங்களுடைய விசுவாசத்தை கட்டி எழுப்பவும், ஆவிக்குரிய வளர்ச்சி அடையவும், ஒரு கால வரிசை முறைப்படி வேதத்தை வாசிக்க இன்னும் யாரெல்லாம் கற்றுக்கொள்ளவில்லையோ அவர்களுக் காக நாங்கள் ஜெபிக்கிறோம். தங்களிடத்திலுள்ள நம்பிக்கையைக் குறித்து





விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் உதவி செய்கின்ற உண்மையுள்ள எல்லா கிறிஸ்தவர்களையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக! *1 பேதுரு 3:15.* நம்மிடத்திலுள்ள நம்பிக்கையைக் குறித்து விசாரித்து கேட்காதவர்களுக்கும் உதவி செய்யும்படி, "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும்" இயேசுகிறிஸ்து செய்கின்ற ஊழியத்தில் நாமும் சேர்ந்துகொள்ளலாம்.